# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2465/07 - 2025 දෙසැම්බර් මස 01 වැනි සඳුදා - 2025.12.01

*2465/07 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டம்**

1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் உப பிரிவு 4(1) மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகிய அநுர குமார திசாநாயக்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி,திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01.
2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆம் திகதி.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ் ஒழுங்குவிதிகள் **"2025 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்"** என அழைக்கப்படும்.

2. திட்வா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்காக வெளிநாடுகளிலிருந்து அன்பளிப்பாக வழங்கப்படும் பொருட்களின் விடுவிப்பை துரிதப்படுத்துவதற்கான இடைக்கால நடவடிக்கையொன்றாக இவ் ஒழுங்குவிதிகள் வெளியிடப்படுகின்றன.

3. 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகளில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரின் அனுமதியின் கீழ், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பெயரில் அல்லது

எந்தவொரு அரச நிறுவனமொன்றிற்கு (பொருள் பெறுநர்) அன்பளிப்பாக எந்தவொரு வெளிநாடொன்றிலிருந்து (அரசு), அமைப்புக்களிலிருந்து அல்லது நபர்களிடமிருந்து கிடைக்கவுள்ள பொருட்களின் இறக்குமதி, கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளிலிருந்து மீள் அறிவித்தல் வரை விடுவிக்கப்படுகின்றன;

3.1 திருத்தம் செய்யப்பட்ட, 2023 சனவரி 01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க *அதிவிசேட வர்த்தமானியில்* வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் மூலம், இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள் வழங்குதல் இடைநிறுத்தப்பட்ட பொருட்களைத் தவிர்ந்த இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் தேவையின் கீழான அவ்வாறான பொருட்களை, இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமமொன்றில்லாது, சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால்

அ. ASYCUDA முறைமையூடாக இலங்கை சுங்கத்துடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ள தொடர்புடைய அரச நிறுவனத்தின் அனுமதியின் / அனுமதிப் பத்திரத்தின் கீழ்,

ஆ. மேலே 3.1 (அ) தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்திடம் கேட்டறிந்து, இலங்கை சுங்கத்திலிருந்து விடுவிக்க வேண்டும்.

3.2 திருத்தம் செய்யப்பட்ட, 2023 சனவரி 01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க *அதிவிசேட வர்த்தமானியில்* வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் மூலம் இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் தேவையின் கீழான ஆனாலும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள் வழங்குவது இடைநிறுத்தப்பட்டுள்ள இயைபு முறைக் குறியீடுகள் 1006.30.19 மற்றும் 1006.30.29 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அவ்வாறான பொருட்கள் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் இலங்கை சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

3.3 திருத்தம் செய்யப்பட்ட, 2023 சனவரி 01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க *அதிவிசேட வர்த்தமானியில்* வெளியிடப்பட்ட, 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் மூலம் இறக்குமதித் தடை செய்யப்பட்டுள்ளதாக பட்டியலிடப்பட்டுள்ள, இயைபு முறைக் குறியீடு 8467.81 (சங்கிலி வார்கள்) மற்றும் 3924.10.90 (ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக்) இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அவ்வாறான பொருட்கள் மாத்திரம் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் இலங்கை சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

3.4 2024 மே 17 ஆம் திகதிய 2384/35 ஆம் இலக்க *அதிவிசேட வர்த்தமானியில்* வெளியிடப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான தரப்படுத்தலும் தரக்கட்டுப்பாடும் ஒழுங்குவிதிகளின் கீழான மற்றும் இவ் வர்த்தமானியின் **1 ஆம் அட்டவணையில்** பட்டியலிடப்பட்டுள்ள அவ்வாறான பொருட்கள், சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளாது இலங்கை சுங்கத்தினால் விடுவிக்கப்பட வேண்டும்.

4. அன்பளிப்பாகக் கிடைக்க வேண்டிய ஏனைய அனைத்துப் பொருட்களின் இறக்குமதிகளும், மேலே ஒழுங்குவிதி இலக்கம் 3 இற்கு இணங்கி செயற்படவில்லையெனில் அவை நடைமுறையிலுள்ள இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் அடிப்படையில் கட்டுப்படுத்தப்படும்.

5. 2019 சனவரி 25 ஆம் திகதிய 2107/45 ஆம் இலக்க *அதிவிசேட வர்த்தமானியில்* வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றன.

5.1 மேலே குறிப்பிடப்பட்ட 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் ஒழுங்குவிதி இலக்கம் 3(அ) இல் எவ்வாறு குறிப்பிடப்பட்டாலும், சுகாதார அமைச்சரின் “1990 சுவசரிய மன்றத்திற்கு இலவச அன்பளிப்பாக நோயாளர் காவு வண்டிகளைப் பெற்றுக் கொள்ளல்” என்ற தலைப்பிலான 2024 யூன் 18 ஆம் திகதிய 24/1261/610/048 ஆம் இலக்க விஞ்ஞாபனத்திற்கான 2024 யூலை 09 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், 1990 சுவசரிய மன்றத்தின் நேரடிப் பயன்பாட்டிற்கு மாத்திரம், நன்கொடையாக அல்லது அன்பளிப்பாக இறக்குமதி செய்யப்படுகின்ற பதிவு செய்யப்படாத (புதிய) நோயாளர் காவு வண்டிகள், காற்றுப்பை இல்லாது சுங்க விடுவிப்பு செய்வதற்கு இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் எச்.எஸ் 87 தலைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மோட்டார் வாகன இறக்குமதி செய்யும் போது உரித்தாகும் ஏனைய நடைமுறையிலுள்ள சட்டவிதிகளின் கீழ் அனுமதி வழங்கப்பட வேண்டும்.

5.2 இவ் ஒழுங்குவிதிகளின் கீழ் பதிவு செய்யப்படாத (புதிய) நோயாளர் காவு வண்டிகள் 150 ஐ மொத்த எண்ணிக்கையாக இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

5.3 இவ் ஒழுங்குவிதிகளின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற நோயாளர் காவு வண்டிகள், 1990 சுவசரிய மன்றத்தின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் முன் அனுமதியில்லாது பதிவை மாற்றம் செய்ய முடியாது.

6. இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு, உரிமம் பெற்ற வங்கிகளுக்கு அல்லது வேறு தொடர்புடைய நிறுவனங்களுக்கு “செயற்பாட்டு ஆலோசனைகள்” வழங்கப்பட வேண்டும்.

7. இவ் ஒழுங்குவிதிகள் தொடர்பாக எழும் எந்தவொரு பிரச்சினை தொடர்பாகவும் இறுதி முடிவு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் வழங்கப்பட வேண்டும்.

I **ஆம் அட்டவணை**

| **தொடர் இல.** | **பொருள்** | **இலங்கை கட்டளைகள்** | **எச்.எஸ் குறியீடு** |
|---|---|---|---|
| 01 | முழு ஆடைப் பால்மா,குறைந்த கொழுப்பினைக் கொண்ட பால்மா மற்றும் கொழுப்பற்ற (ஆடை நீக்கிய)பால்மா | இ.க 731 பால்மாவிற்கான விபரக் கூற்று | 0402.10<br>0402.21<br>0402.29 |
| 02 | கட்டிப்பால் | இ.க 179 இனிப்பூட்டப்பட்ட முழு ஆடைக் கட்டிப்பாலுக்கான விபரக்கூற்று | 0402.99.10<br>0402.99.90 |
| 03 | பட்டர் | இ.க 279 பட்டருக்கான விபரக் கூற்று | 0405.10 |
| 04 | பால் கொழுப்பு பரவல் பொருட்கள் | இ.க 1428 பால் கொழுப்பு பரவல் பொருட்களுக்கான விபரக் கூற்று | 0405.20<br>0405.90 |
| 05 | சிவப்பு பருப்புகள் உடைக்கப்பட்டவை | இ.க 896 உடைக்கப்பட்ட சிவப்பு பருப்புகளுக்கான விபரக் கூற்று | 0713.40.12 |
| 06 | முழு மஞ்சள் மற்றும் தூள் | இ.க 613 முழு மஞ்சள் மற்றும் தூள் தொடர்பிலான விபரக்கூற்று | 0910.30.10<br>0910.30.90 |
| 07 | ஆர்.பி.டி. சோயா அவரை எண்ணெய் | இ.க 293 சோயா அவரை எண்ணெய்க்கான விபரக் கூற்று | 1507.90 |
| 08 | ஆர்.பி.டி. பாம் ஒயில் | இ.க 720 தாவர எண்ணெய்க்கான விபரக் கூற்று | 1511.90.20<br>1511.90.90 |
| 09 | ஆர்.பி.டி. பாம் ஒலீன் | இ.க 961 பாம் ஒலீனிற்கான விபரக் கூற்று | 1511.90.90 |
| 10 | ஆர்.பி.டி. சூரியகாந்தி விதை எண்ணெய் | இ.க 946 சூரியகாந்தி விதை எண்ணெய்க்கான விபரக் கூற்று | 1512.19 |
| 11 | தேங்காய் எண்ணெய், சுத்திகரிக்கப்படாதவை தவிர | இ.க 32 தேங்காய் எண்ணெய்க்கான விபரக் கூற்று | 1513.19.10<br>1513.19.90 |
| 12 | ஆர்.பி.டி. தாலாம் பருப்பு எண்ணெய் | இ.க 862 தாலாம் பருப்பு எண்ணெய்க்கான விபரக் கூற்று | 1513.29 |
| 13 | ஆர்.பி.டி. தாலாம் பருப்பு ஒலீன் | இ.க 1555 தாலாம் பருப்பு ஒலீன் விபரக் கூற்று | 1513.29 |
| 14 | ஆர்.பி.டி. சோள (தானிய) எண்ணெய் | இ.க 905 சோள (தானிய) எண்ணெய்க்கான விபரக் கூற்று | 1515.29 |
| 15 | நல்லெண்ணெய் | இ.க 231 நல்லெண்ணெய்க்கான விபரக் கூற்று | 1515.50 |
| 16 | மாகரின், கொழுப்பு பரப்பப்பட்டவை மற்றும் கலக்கப்பட்ட கொழுப்பு பரப்பப்பட்ட வெதுப்பக பண்டங்கள் | இ.க 1427 கொழுப்பு பரப்பப்பட்ட மற்றும் கலக்கப்பட்ட கொழுப்பு பரப்பப்பட்ட வெதுப்பக பண்டங்களிற்கான விபரக் கூற்று | 1517.10.30<br>1517.10.90<br>1517.90 |

| தொடர் இல. | பொருள் | இலங்கை கட்டளைகள் | எச்.எஸ் குறியீடு |
|---|---|---|---|
| 17 | தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் | இ.க 591 தகரத்தில் அடைக்கப்பட்ட மீனிற்கான விபரக் கூற்று | 1604.11<br>1604.12<br>1604.13<br>1604.14<br>1604.15<br>1604.16<br>1604.19 |
| 18 | வெள்ளை சீனி மற்றும் ஐசிங் சுகர் | இ.க 191 வெள்ளை சீனிக்கான விபரக் கூற்று | 1701.91.10<br>1701.91.20<br>1701.99.10<br>1701.99.20<br>1701.99.30<br>1701.99.40<br>1701.99.90 |
| 19 | நூடில்ஸ்,<br>உடன் தயாரிப்பு நூடில்ஸ் | இ.க 1534 உடன் தயாரிப்பு நூடில்ஸ் இற்கான விபரக்கூற்று | 1902.11<br>1902.19 |
| | மெக்கறோனி<br>ஸ்பெகட்டி<br>வேர்மிஸெலி | இ.க 420 பெஸ்டா உற்பத்திகளுக்கான விபரக்கூற்று | 1902.20<br>1902.30 |
| 20 | அரிசி நூடில்ஸ் (அரிசிசேமியா) | இ.க 858 அரிசி நூடில்ஸ்களுக்கான (அரிசிசேமியா) விபரக் கூற்று | 1902.11<br>1902.19<br>1902.20<br>1902.30 |
| 21 | பிஸ்கட்டுகளும் குக்கீஸ்களும் | இ.க 251 பிஸ்கட்டுகளும் குக்கீஸ்களுக்குமான விபரக் கூற்று | 1905.31.10<br>1905.31.90 |
| 22 | வேபர்ஸ்கள் | இ.க 1313 வேபர்ஸ்களுக்கான விபரக் கூற்று | 1905.32.10<br>1905.32.90 |
| 23 | ஜாம்கள், ஜெலிகள்,<br>மார்மலேட்டுகள் மற்றும் பதப்பொருட்கள் | இ.க 265 ஜாம்கள், ஜெலிகள், மார்மலேட்டுகள் மற்றும் பதப்பொருட்களான விபரக் கூற்று | 2007.10<br>2007.91<br>2007.99 |
| 24 | செறிவுடைய பழச்சாறுகள்,<br>செறிவுடைய பழப்பாகுகள்<br>செறிவுடைய பழத்தீம்பான திரட்டுகள் | இ.க 214 பழச்சாறுகள், பழப்பாகுகள் மற்றும் பழத்தீம்பானங்களுக்கான விபரக்கூற்று | 2009.19<br>2009.29<br>2009.39<br>2009.49<br>2009.50<br>2009.61<br>2009.69<br>2009.79<br>2009.81<br>2009.89<br>2009.90 |

| தொடர் இல. | பொருள் | இலங்கை கட்டளைகள் | எச்.எஸ் குறியீடு |
|---|---|---|---|
| 25 | செறிவுடைய பழச்சாறுகள்,<br>செறிவுடைய பழப்பாகுகள்<br>செறிவுடைய பழத்தீம்பான திரட்டுகள | இ.க 730 செறிவான பழச்சாறு திரட்டுகள், பழப்பாகு திரட்டுகள் மற்றும் பழத்தீம்பான திரட்டுகளுக்கான விபரக்கூற்று | 2009.11.10<br>2009.11.90<br>2009.19<br>2009.29<br>2009.39<br>2009.49<br>2009.50<br>2009.69<br>2009.79<br>2009.81<br>2009.89.10<br>2009.89.90<br>2009.90 |
| 26 | தயார்நிலைப் பழப்பானங்கள் | இ.க 729 தயார்நிலைப் பழப்பானங்களுக்கான விபரக்கூற்று | 2106.90.49<br>2202.10<br>2202.99.30<br>2202.99.51<br>2202.99.59<br>2202.99.70<br>2202.99.91<br>2202.99.99 |
| 27 | செறிவான பழரசங்கள் மற்றும் அமிர்தங்கள் | இ.க 1328 செறிவான பழரசங்கள் மற்றும் அமிர்தங்களுக்கான விபரக்கூற்று | 2009.12<br>2009.21<br>2009.31<br>2009.41<br>2009.50<br>2009.61<br>2009.71<br>2009.81<br>2009.89.10<br>2009.89.90<br>2009.90 |
| 28 | பால் சேர்க்கப்பட்ட பானங்கள் | இ.க 917 பால் சேர்க்கப்பட்ட பானங்களுக்கான விபரக்கூற்று | 2202.99.61<br>2202.99.69 |
| 29 | போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் | இ.க 1038 பொதிசெய்யப்பட்ட (போத்தலில் அடைக்கப்பட்ட) குடிநீரிற்கான விபரக்கூற்று | 2201.90.10 |
| 30 | போத்தலில் அடைக்கப்பட்ட இயற்கைக் கனிப்பொருள் நீர் | இ.க 894 போத்தலில் அடைக்கப்பட்ட இயற்கைக் கனிப்பொருள் குடிநீரிற்கான விபரக்கூற்று | 2201.10.10 |
| 31 | 1.இனிப்பூட்டப்பட்டதும் காபனேற்றப்பட்டதுமான குடிபானங்கள்<br>2.காபனேற்றப்பட்ட நீர் மற்றும் அனுமதிக்கப்பட்ட நிறங்களைக் கொண்ட அல்லது கொண்டிராத சோடாநீர்<br>3.மணமூட்டப்பட்டதும் கோப்பியிடப்பட்டதுமான குடிபானங்கள் | இ.க 183 காபனேற்றப்பட்ட குடிபானங்களுக்கான விபரக்கூற்று | 2202.10<br>2202.99.30<br>2202.99.91<br>2202.99.99 |

| தொடர் இல. | பொருள் | இலங்கை கட்டளைகள் | எச்.எஸ் குறியீடு |
|---|---|---|---|
| 32 | காபனேற்றப்படாத செயற்கை முறையில் நிறமூட்டப்பட்ட கோடியல்கள் மற்றும் குளிர்பானங்கள் | இ.க 221 காபனேற்றப்படாத செயற்கை முறையில் நிறமூட்டப்பட்ட கோடியல்கள் மற்றும் குளிர்பானங்களுக்கான விபரக்கூற்று | 2106.90.49<br>2202.10<br>2202.99.30<br>2202.99.40<br>2202.99.91<br>2202.99.99 |
| 33 | உணவு தரத்திலான உப்பு (தானியம் போன்ற வடிவிலானவை) | இ.க 79 உணவுதரத்திலான உப்புகளுக்கான (தானியம் போன்ற வடிவிலானவை) விபரக்கூற்று | 2501.00 |
| 34 | உணவு தரத்திலான உப்பு (தூள் போன்ற வடிவிலானவை) | இ.க 80 உணவு தரத்திலான உப்புகளுக்கான (தூள் போன்ற வடிவிலானவை) விபரக்கூற்று | 2501.00 |
| 35 | குழந்தைகளுக்கான கொலோன் | இ.க 589 குழந்தைகளுக்கான கொலோன் தொடர்பிலான விபரக்கூற்று | 3303.00.21 |
| 36 | குழந்தைகளுக்கான சரும பவுடர் | இ.க 187 குழந்தைகளுக்கான சரும பவுடர் தொடர்பிலான விபரக்கூற்று | 3304.91 |
| 37 | பற்பசை | இ.க 275 பற்பசை தொடர்பிலான விபரக்கூற்று | 3306.10 |
| 38 | குளியலறை சவர்க்காரம் | இ.க 34 குளியலறை சவர்க்காரம் தொடர்பிலான விபரக்கூற்று | 3401.11.30<br>3401.11.90 |
| 39 | குளிக்கும் போது பாவிக்கப்படும் சவர்க்காரம் | இ.க 1220 குளிக்கும் போது பாவிக்கப்படும் சவர்க்காரம் தொடர்பிலான விபரக்கூற்று | 3401.11.90 |
| 40 | குழந்தைகளுக்கான சவர்க்காரம் | இ.க 547 குழந்தைகளுக்கான சவர்க்காரம் தொடர்பிலான விபரக்கூற்று | 3401.11.30 |
| 41 | சலவைச் சவர்க்காரம் | இ.க 554 சலவைச் சவர்க்காரம் தொடர்பிலான விபரக்கூற்று | 3401.19.30<br>3401.19.90 |
| 42 | செயற்கையான சலவை அழுக்கு நீக்கும் பவுடர் | இ.க 760 செயற்கையான சலவை அழுக்கு நீக்கும் பவுடர் தொடர்பிலான விபரக்கூற்று | 3402.50<br>3402.90.10 |

| தொடர் இல. | பொருள் | இலங்கை கட்டளைகள் | எச்.எஸ் குறியீடு |
|---|---|---|---|
| 43 | சுலவை செய்யும் சவர்க்கார பவுடர், பனித்துகள் மற்றும் துனுக்குகள் | இ.க 38 சலவை செய்யும் சவர்க்கார பவுடர், பனித்துகள் மற்றும் துனுக்குகள் தொடர்பிலான விபரக்கூற்று | 3401.20.90 |
| 44 | தீப்பெட்டி | இ.க 11 தீப்பெட்டி தொடர்பிலான விபரக்கூற்று | 3605.00 |
| 45 | நுளம்புச்சுருள் | இ.க 453 நுளம்புச்சுருள் தொடர்பிலான விபரக்கூற்று | 3808.59.10<br>3808.61.10<br>3808.62.10<br>3808.69.10<br>3808.91.10 |
| 46 | நுளம்புகொல்லித் துண்டுகள் (மெட்ஸ்) | இ.க 930 நுளம்புகொல்லித் துண்டுகள் (மெட்ஸ்) தொடர்பிலான விபரக்கூற்று | 3808.59.91<br>3808.61.20<br>3808.62.20<br>3808.69.90<br>3808.91.30<br>3808.91.90 |
| 47 | சாயம் தீட்டுக்கோல் மற்றும் பசைகள் | இ.க 777 சாயம் தீட்டுக்கோல் மற்றும் பசைகள் தொடர்பிலான விபரக்கூற்று | 9609.10.30<br>9609.90 |
| 48 | பொலிஈதைலீன் நீர்சேமிப்புத் தாங்கிகள் | இ.க1174 பொலிஈதைலீன் நீர்சேமிப்புத் தாங்கிகள் தொடர்பிலான விபரக்கூற்று. | 3925.10<br>3925.90 |
| 49 | அப்பியாசப் புத்தகங்கள் | இ.க 382 அப்பியாச புத்தகங்கள் தொடர்பிலான விபரக்கூற்று. | 4820.20 |
| 50 | குடை (மடிக்கத்தக்க மற்றும் மடிக்க இயலாத) | இ.க 1207 குடை தொடர்பிலான விபரக்கூற்று<br>பகுதி 1 - மடிக்க இயலாத குடை<br>பகுதி 2 - மடிக்கத்தக்க குடை | 6601.91<br>6601.99 |
| 51 | போசிலின் மற்றும் செரமிக்கிலான மேசைப்பொருட்கள் (தனி வெள்ளை மாத்திரம்) | இ.க 1222 போசிலின் மற்றும் செரமிக்கிலான மேசைப் பொருட்கள் தொடர்பிலான விபரக்கூற்று | 6911.10<br>6912.00.10 |
| 52 | ஆக்கப்பட்ட அலுமினியப் பாத்திரங்கள் (அலுமினியத்திலான சாப்பாட்டு மேசைப் பொருட்கள் மற்றும் சமையலறை பொருட்கள்) | இ.க 69 ஆக்கப்பட்ட அலுமினியப் பாத்திரங்கள் (அலுமினியத்திலான சாப்பாட்டு மேசைப் பொருட்கள் மற்றும் சமயலறை பொருட்கள்) தொடர்பிலான விபரக்கூற்று | 7615.10.90 |
| 53 | மின்விசிறிகள் மற்றும் சீராக்கிகள் | இ.க 814 மின்விசிறிகள் மற்றும் சீராக்கிகள் தொடர்பிலான விபரக்கூற்று | 8414.51 |

| தொடர் இல. | பொருள் | இலங்கை கட்டளைகள் | எச்.எஸ் குறியீடு |
|---|---|---|---|
| 54 | குழாய் வடிவ புளொரசனட் விளக்குகளுக்கான சாரணைக்கற்கள் | இ.க 1150 குழாய் வடிவ புளொரசனட் விளக்குகளுக்கான சாரணைக்கற்கள் தொடர்பிலான விபரக்கூற்று | 8504.10.10<br>8504.10.90 |
| 55 | முதன்மைக் கலங்கள் மற்றும் மின்கலங்கள் | இ.க 1198 முதன்மைக் கலங்கள் மற்றும் மின்கலங்கள் தொடர்பிலான விபரக்கூற்று | 8506.10.10<br>8506.10.90<br>8506.80 |
| 56 | நீரை சூடாக்குவதற்கான மின் அமிழ்தல் நீர்வெப்பமாக்கிகள் | இ.க 1193 நீரை சூடாக்குவதற்கான மின் அமிழ்தல் நீர்வெப்பமாக்கிகள் தொடர்பிலான விபரக்கூற்று | 8516.10 |
| 57 | மின்சார வெப்பத்தகடு | இ.க 1495 மின்சார வெப்பத்தகடு,டோஸ்டர்ஸ் மற்றும் அதையொத்த சிறிய சமையல் உபகரணங்கள் தொடர்பிலான விபரக்கூற்று | 8516.60.90 |
| 58 | மின்சார கேத்தல் | இ.க 1501 திரவம் சூடேற்ற பயன்படும் வீட்டு உபகரணங்கள் மற்றும் அதையொத்த மின்சார உபகரணங்கள் தொடர்பிலான விபரக்கூற்று | 8516.79.20 |
| 59 | குழாய் வடிவ புளொரசன்ட் விளக்குகளுக்கான ஒளிர்வு தொடக்கிகள் | இ.க 1260 குழாய் வடிவ புளொரசன்ட் விளக்குகளுக்கான ஒளிர்வு தொடக்கிகள் தொடர்பிலான விபரக்கூற்று | 8536.50.10 |
| 60 | தங்குதன் இழை பொருத்தப்பட்ட வீட்டுப்பாவனைக்கான விளக்குகள்,அதே போன்ற பொது ஒளியூட்டல் தேவைகள் | இ.க 984 தங்குதன் இழை பொருத்தப்பட்ட வீட்டுப்பாவனைக்கான விளக்குகள்,அதே போன்ற பொது ஒளியூட்டல் தேவைகள் தொடர்பிலான விபரக்கூற்று | 8539.22.20<br>8539.22.90 |
| 61 | பொது வெளிச்சத்தினை வழங்கும் சேவைகளுக்கான செல்ப் - பலாஸ்டட் (பூரணமான வகையிலான ஒன்றிணைந்த புளொரசன்ட் விளக்குகள்) விளக்குகள் (CFL) | இ.க 1231 பொது வெளிச்சத்தினை வழங்கும் சேவைகளுக்கானசெல்ப் - பலாஸ்டட் (பூரணமான வகையிலான ஒன்றிணைந்த புளொரசன்ட் விளக்குகள்) விளக்குகள் தொடர்பிலான விபரக்கூற்று | 8539.31.10 |
| 62 | நீட்டக்கூடிய மின் வடங்கள் /எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய மின் குதை | இ.க734 அம்பியர் 13 செருகிகள், வெளி சொக்கட்டுகள் மற்றும் இணைப்பு அலகுகள் தொடர்பிலான விபரக்கூற்று | 8544.42.91 |
| 63 | பற்தூரிகைகள் | இ.க 276 பற்தூரிகைகள் தொடர்பிலான விபரக்கூற்று | 9603.21 |
| 64 | வெற்றிடக் குடுவைகள் | இ.க 397 வெற்றிடப் பொருள்களும் காவலிடப்பட்ட குடவைகள், சாடிகள் மற்றும் கூசாக்கள் தொடர்பிலான விபரக்கூற்று | 9617.00.90 |

| தொடர் இல. | பொருள் | இலங்கை கட்டளைகள் | எச்.எஸ் குறியீடு |
|---|---|---|---|
| 65 | சுகாதாரத் துவாய்கள் | இ.க 1732 ஒரு தடவை பயன்படுத்தக்கூடிய சுகாதாரத் துவாய்கள்<br>இ.க 1749 ஒரு தடவை பயன்படுத்தக்கூடிய மிகவும் தடிப்பமான/ மெல்லிய சுகாதாரத் துவாய்கள் தொடர்பிலான விபரக்கூற்று | 9619.00.10 |
| 66 | மாஜரின்,கொழுப்பு பரப்பப்பட்டவை மற்றும் கலக்கப்பட்ட கொழுப்பு பரப்பப்பட்டவை. வெதுப்பக கொழுப்புபண்டங்கள் | இ.க 1102 வெதுப்பக கொழுப்பு பண்டங்களுக்கான விபரக்கூற்று | 1517.10.30<br>1517.10.90<br>1517.90 |
| 67 | குழந்தைங்களுக்கான சரும கிரீம் மற்றும் லோஷன் | இ.க 742 குழந்தைங்களுக்கான சருமகிரீம் மற்றும் லோஷன் தொடர்பிலான விபரக்கூற்று | 3304.99 |
| 68 | குழந்தைகளுக்கான எண்ணெய் | இ.க 1191 குழந்தைகளுக்கான எண்ணெய் தொடர்பிலான விபரக்கூற்று | 3304.99 |
| 69 | குழந்தைகளின் முடிக்கான ஷம்பு | இ.க 1342 குழந்தைகளின் முடிக்கான ஷம்பு தொடர்பிலான விபரக்கூற்று | 3305.10 |
| 70 | வயது வந்தவர்களின் முடிக்கான ஷம்பு | இ.க 1346 வயது வந்தவர்களின் முடிக்கான ஷம்பு தொடர்பிலான விபரக்கூற்று | 3305.10 |
| 71 | மென்மையான சவர்க்காரம் | இ.க 37 மென்மையான சவர்க்காரம் தொடர்பிலான விபரக்கூற்று | 3401.11.30<br>3401.11.90 |
| 72 | கார்போலிக் சவர்க்காரம் | இ.க 35 கார்போலிக் சவர்க்காரம் தொடர்பிலான விபரக்கூற்று | 3401.19.30<br>3401.19.90 |
| 73 | திரவ நிலை சவர்க்காரம் | இ.க 1142 திரவநிலை சவர்க்காரம் தொடர்பிலான விபரக்கூற்று | 3401.20.90 |
| 74 | வீட்டு மற்றும் தொழில்த்துறை நோக்கத்திற்கான திரவநிலை சவர்க்காரம் | இ.க 1390 வீட்டு மற்றும் தொழில்த்துறை நோக்கத்திற்கான திரவநிலை சவர்க்காரம் தொடர்பிலான விபரக்கூறு | 3401.20.90 |
| 75 | திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயுவுடன் பயன்படுத்தக்கூடிய வீட்டு குறைந்த அழுத்த எரிவாயு அடுப்புகள் | இ.க 451 திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயுவுடன் பயன்படுத்தக்கூடிய வீட்டு குறைந்த அழுத்த எரிவாயு அடுப்புகள் தொடர்பிலான விபரக்கூற்று | 7321.11 |

| தொடர் இல. | பொருள் | இலங்கை கட்டளைகள் | எச்.எஸ் குறியீடு |
|---|---|---|---|
| 76 | மின்சாரஉபகரணங்கள் (ரைஸ் குக்கர்கள்) | இ.க 1501 திரவம் சூடேற்ற பயன்படும் வீட்டு உபகரணங்கள் மற்றும் அதையொத்த மின்சார உபகரணங்கள் தொடர்பிலான விபரக்கூற்று- (ரைஸ் குக்கர்கள்) | 8516.60.10 |
| 77 | பொது ஒளியூட்டு சேவைக்கான எல்.ஈ.டீ விளக்குகள; | இ.க 1458 பொது ஒளியூட்டு சேவைக்கான எல்.ஈ.டீ விளக்குகள் தொடர்பிலான விபரக்கூற்று | 8539.52 |

**EOG 12-0017**